[18th March 1963

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பவானி பாசனப் பகுதிகளில் சென்ற மூன்று ஆண்டுகளாக நெல் பயிரிடாமல் இருக்கும் விவசாயிகள் ஏழைகளாக இருக்கிறார்கள். அப்போது வசதி இல்லாமல் அவ்வாறு செய்தார்கள். இந்த ஆண்டு வசதியை அனுசரித்து நெல் பயிரிட முன் வரும்போது, சர்க்கார் தடை செய்தால், ஏழை விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே, தண்டத் தீர்வையை விதிக்காமல் இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இன்னும் இரண்டு தினங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், பதில் சொல்லுகிறேன்.

Roads and irrigation facilities (Tirunelveli district)

* 278 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation from Sri M. S. Selvarajan, M.L.A. during 1960–61 and 1961–62 regarding the general improvement of roads and better irrigation facilities for the Tirunelveli district ; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Four representation were received during 1960–61. No representation was received during 1961–62.

(*b*) Action taken in the matter has already been intimated to the Member.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், சட்டசபை அங்கத்தினர் செல்வராஜன் கொடுத்திருக்கக்கூடிய கோரிக்கைகள் பலவற்றில் சிலவற்றின் பேரிலாவது தீர்க்கமான முடிவுகளை அரசாங்கம் எடுத்திருக்கிறதா ? அதைப்பற்றி இங்கு அறிவிக்க முடியுமா ?

MR. SPEAKER : It is too general a question.

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்விக்குத் தக்க பதில் சொல்லியிருக்கிறேன். அவர் எழுதிய கடிதங்களுக்கெல்லாம் முறையாகப் பதில் போய்க்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாணியன் ஏரி (தஞ்சாவூர் வட்டம்)

* **279 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தாலூகா நெ. 37-ம், சித்திரக்குடி கிராமத்தில் உள்ள வாணியன் ஏரி எத்தனை எக்கர் நிலம்?

(இ) அந்த நிலம் சாகுபடியில் உள்ளதா ?

(உ) உள்ளதென்றால் தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறதா ?

(எ) அந்த நிலத்தில் சாகுபடி செய்பவர்கள் அடமானம் கோரினார்களா ?